தலைப்பு 262 - மாத்தறை மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 262 – மாத்தறை மாவட்ட செயலகத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே மாதம் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே மாதம் 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, மாத்தறை மாவட்ட செயலகத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மாத்தறை மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மாத்தறை மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை

மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை

விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில், சந்தைப் பெறுமதியில் மொத்தம் ரூபா 6,400,000 பெறுமதியான டபிள் கெப் வண்டிடி (Double Cab) மற்றும் முச்சக்கர வண்டி கணக்குகளில் உள்ளடக்கப்படாமையால், மொத்தச் சொத்துக்கள் அந்த பெறுமதியில் குறைவாக அறிவிக்கப்பட்டிருந்தது.	பொது நிர்வாக அமைச்சுடன் கலந்துரையாடி உத்தியோக-பூர்வ அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், 2025 ஆம் ஆண்டுக்கான கணக்கைத் தயாரிக்கும்போது அந்த நிலையான சொத்துக்-களை உள்ளடக்கப்படும்.	சம்பந்தப்பட்ட சொத்துக்களை உரிய முறையில் மதிப்பீடு செய்து நிதிநிலை அறிக்கைகளில் சேர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	5 பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான, மொத்தம் 13.183 ஹெக்டேயர் நிலப்பரப்பும், மொத்தம் 8,256 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்ட 5 கட்டடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை.	5 பிரதேச செயலகங்களுக்குரிய நிலப்பரப்பும் 4 பிரதேச செயலகங்களுக்குரிய கட்டடங்களும் இதுவரையில் மதிப்பீடு செய்யப்படவில்லை என்றும், 2025 ஆம் ஆண்டில் இந்தச் சொத்துக்களில் ஒரு பகுதியையாவது மதிப்பீடு செய்து முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	விரைவான வேலைத்திட்ட-மொன்றைத் தயாரித்து, இந்த நிலப்பரப்பையும் கட்டடங்களையும் மதிப்பீடு செய்து கணக்குகளில் உள்ளடக்குதல் வேண்டும்.

(இ)	மாத்தறை, வெலிகம மற்றும் கம்புறுப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய அரச காணிகள் தொடர்பான ஆவணம் தயாரிக்கப்படவில்லை. இதனால், 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 180 ஆம் இலக்க கட்டளையின்படி பணிகளை நிறைவேற்றுவதும், காணிகளின் முறையான முகாமைத்துவத்தை மேற்கொள்வதும் கடினமாக இருந்தது.	அரச காணிகளை பிரிவுகள் ரீதியாக அடையாளம் கண்டு ஆவணமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, அத்துமீறல் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய சாத்தியம் கிடைத்துள்ளதுடன், நீர்ப்பாசனம், கடற்கரை, வீதி மற்றும் வனப்பாதுகாப்பு போன்ற நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளை அத்துமீறிப் பயன்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அறிவூட்டுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய காணிகள் தொடர்பான ஆவணத்தைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் விரைவாக நிறைவு செய்யப்பட வேண்டும் அத்துடன், அது செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்படுதலும் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீண்டுவரும் செலவின விடயங்கள் 19 இற்குரிய மொத்த நிகர ஏற்பாட்டில் 5.5 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் மீதமிருந்தன. அத்துடன், 5 மூலதனச் செலவின விடயங்களுக்குரிய மொத்த நிகர ஏற்பாட்டில் 6 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருந்தன.	கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	மதிப்பீடுகள் இயன்றளவு துல்லியமாக தயாரிக்கப்படுதல் வேண்டும் அத்துடன், அதன் முன்னேற்றம் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு, பலவீனமான செயற்றிறன் சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ)	8 செலவின விடயங்களில் மதிப்பீட்டு ஏற்பாடு போதுமானதாக இல்லாமையினால், வேறு 12 செலவின விடயங்களிலிருந்து 2 சதவீதம் முதல் 113 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகளை மாற்றீடு செய்து செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன், மேலும் 7 செலவின விடயங்களின் மதிப்பீட்டு ஏற்பாட்டைப் பயன்படுத்தாமையினால், அதன் ஏற்பாடுகளிலிருந்து 1 சதவீதம் முதல் 12 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகளை வேறு செலவின விடயங்களுக்கு மாற்றீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	மதிப்பீடுகள் இயன்றளவு துல்லியமாக தயாரிக்கப்படுதல் வேண்டும் அத்துடன், அதன் முன்னேற்றம் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு, பலவீனமான செயற்றிறன் சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.
(இ)	1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 38 “அ“ உப சரத்தின் கீழ், 5 பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, காணிகளை சுவீகரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக மொத்தம் ரூபா 760,857,627 ஆன வட்டித் தொகையொன்றைச் செலுத்த நேரிட்டிருந்தது. அத்துடன், குறித்த காணிகள் சுவீகரிப்பின் நோக்கம் கருதி பயன்படுத்தப்படாதமையினால், உரிய செலவினங்கள் பயனற்ற செலவினமாக மாறியிருந்தன.	நிறுவனங்களின் நோக்க-ங்கள் மாறியமை காரணமாக, காணி சுவீகரிப்பின் மூல நோக்கம் நிறைவேற்றுவது கடினமாகி-விட்டது என்பதை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.	முறையான விசாரணை-யொன்றை மேற்கொண்டு, தாமதத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், நட்டஈட்டுப் பரிசோதனைகளை விரைவு-படுத்தி சட்டரீதியான நட்டஈட்டை விரைவாக விடுவிப்பதற்கும், இதுவரையில் சுவீகரிக்கப்பட்ட காணிகளை உரிய சுவீகரிப்பின் நோக்கத்திற்கெனப் பயன்படுத்-துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், மாவட்டச் செயலகத்திற்கு 14 அமைச்சுக்கள், 11 திணைக்களங்கள் மற்றும் 2 ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மொத்த ரூபா 111,181,222 ஏற்பாடுகளில், மொத்தம் ரூபா 81,779,610 மட்டுமே செலவிடப்பட்டிருந்-	சில ஏற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டமையால் அவற்றைப் பொறுப்பேற்-காமை, சில ஏற்பாடுகள் ஆண்டின் முடிவுக்கு அண்மித்து வழங்கப்பட்டமை காரணமாகச் செலவுகளை மேற்கொள்ளவும், கொள்-வனவு நடவடிக்கைகளைச் செய்யவும் போதிய கால	ஏற்பாடுகளை குறிக்கோளாக கொண்ட பணிகளுக்கு உச்ச அளவில் பயன்படுத்தக் கூடியவாறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் அல்லது நிறுவனங்கள் மத்தியில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி முறையான வேலைத்-திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும்.

	தமையினால், மொத்தம் ரூபா 29,401,612 அதாவது மொத்தக் கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகளில் 26 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	அவகாசம் இன்மையோடு, சுற்றுநிருபங்கள் மற்றும் அங்கீகாரங்களைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதங்கள் போன்றன இதற்குக் காரணங்களாக இருந்தன.	
(ஆ)	கிராமியப் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுடன் விவசாய அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மனை அடிப்படையிலான ஆடு வளர்ப்புத் திட்டத்திற்காக ரூபா 4,410,150 செலவு செய்யப்பட்டு 16 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 64 பயனாளிகளுக்கு 192 ஆடுகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. பல்வேறு காரணிகளின் தாக்கம் காரணமாக, திட்டத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் பயனுள்ள முறையில் அடைய முடியவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	வாழ்வாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது இவ்வாறான நடைமுறைச் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன.	இவ்விடயம் தொடர்பாக, முறையானதும் பொருத்தமானதுமான பின்தொடர் பொறிமுறைகள் ஊடாக, செலவிடப்பட்ட தொகைக்கு பெறுமதியைக் கூட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	சுற்றாடல் அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் பசுமை தொழில்முயற்சியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ், பிரதேசத்தின் தேவைக்கேற்ற நாற்றுக்கள் மற்றும் உணவுப் பயிர்கள், குறைந்த பயன்பாட்டிலுள்ள பழமர நாற்றுக்கள், பழமர நாற்றுகள் (Grafted Fruit Plants) மற்றும் வனப்பரப்பை அதிகரிக்கக்கூடிய மரங்களுக்கான நாற்றுமேடைகளை இடுவதற்காக 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 21 பயனாளிகளுக்கு ரூபா 6,075,000 செலுத்தப்பட்டிருந்தது. பயனாளிகளால் 3 வருடங்களுக்குள் 345,000 நாற்றுக்களை உற்பத்தி செய்து சுற்றாடலுக்கு விடுவிப்பதே நோக்கமாக இருந்த போதிலும், உற்பத்தி	2021/2022 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் காரண-மாக, இணங்கிய வகையில் பயனாளிகள் செயற்பட முடியாமை மற்றும்2023/2024 ஆம் ஆண்டுகளில் நிலவிய கடும் மழைவீழ்ச்சியினால் நாற்றுக்கள் அழிவடைந்தமை ஆகியன இதற்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.	முறையான பின்தொடர் செயன்முறையொன்றை அறிமுகப்படுத்துவதன் ஊடாக, திட்டத்தில் முன்னேற்றத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

	செய்யப்பட்ட நாற்றுக்களின் அளவு 176,969 ஆகவும், அது எதிர்பார்க்கப்பட்ட நாற்றுக்களின் அளவில் 51 சதவீதமாகவும் இருந்தமை-யினால், திட்டத்தின் இலக்குகளைப் பயனுள்ள முறையில் அடைய முடியாமற் போயுள்ளது.		
(ஈ)	நிதி, பொருளாதார உறுதிப்ப-டுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் 2024 ஏப்ரல் 04 ஆந் திகதிய DFD/2004-1 இலக்கச் சுற்றுநிருபத்திற்கமைய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்க-ளுக்கு அரிசி வழங்குவதற்காக மாத்தறை மாவட்டத்திலுள்ள 16 பிரதேச செயலகங்களால் 2 கட்டங்களின் கீழ் 2,579,400 கிலோகிராம் அரிசி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அரிசியின் ஒரு கிலோகிராமுக்கு அப்போது சந்தையில் நிலவிய ரூபா 150 இற்கும் 165 இற்கும் இடைப்பட்ட சில்லறை விலைகளைக் கவனத்திற்கொள்ளாது, ஒரு கிலோகிராம் அரிசி ரூபா 186/- என்ற விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டமையினால், ரூபா 54,540,680 ஆன நிதி நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்டி-ருந்தது.	அபிவிருத்தி நிதி திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஊடாக நடாத்தப்பட்ட இணையவழி கலந்துரையாடலில் எடுக்கப்-பட்ட தீர்மானங்களுக்கமைய, உறுதிப்படுத்தப்பட்ட விலை-க்கமைய அரிசி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	முறையான விசாரணை-யொன்றை மேற்கொண்டு, நிதி கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக உரிய சிக்கனத்துடன் செயற்படாமை காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தைத் தீர்மானித்து, பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினரிட-மிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(உ)	பிரம்பு, பித்தளை, மண், மரச் சாமான்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ், ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு ஒரு கிராமியக் கைத்தொழில் தொழில்முயற்சியாளரை உருவாக்கும் திட்டத்தின் கீழ் வெலிகம மற்றும் அக்குரஸ்ஸ பிரதேச செயலகங்களால் தெரிவு செய்யப்பட்ட 78 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபா 1,527,080 செலவு செய்யப்பட்ட போதிலும், அவர்களில் 25 பயனாளிகள் செயற்பாடுடைய தொழில்-முயற்சியாளர்களாகச் செயற்படாமையினால், திட்டத்தின்	இந்த உபகரணங்கள் மிகவும் பொருத்தமான நபர்களுக்கே வழங்கப்பட்டன என்றும், தெரிவு செய்யப்பட்ட தொழில்முயற்சியாளர்கள் தொடர்பாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பிரிவுக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் தொடர்ச்சியான மேற்பார்-வையை மேற்கொள்வார்கள் என்றும், அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மாதாந்த முன்னேற்றத்தை வினவுவதன் மூலம் பிரதேச	இந்த திட்டத்தின் வெற்றியை அதிகரிப்பதற்காக முறையான பின்தொடர் செயன்முறை-யொன்றை நடைமுறைப்படு-த்தலும் எதிர்காலத்தில் இவ்வாறான திட்டங்களை சிறந்த திட்டமிடலுடன் ஆரம்பித்து உரிய மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தலும் வேண்டும்.

	நோக்கங்களையும் இலக்குகளையும் பயனுள்ள முறையில் அடைய முடியவில்லை.	செயலாளர் தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.	
(ஊ)	சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட, 2 இலட்சம் சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை மையமாகக் கொண்ட, முழுமையான மனை சார்ந்த பொருளாதார திட்டத்தின் மாத்தறை, அக்குரஸ்ஸ மற்றும் வெலிகம பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 62 பயனாளிகளுக்கு, அரசாங்கப் பங்களிப்பாக ரூபா 2,001,310 செலவிடப்பட்டு வழங்கப்பட்ட உபகரணங்கள், நோக்கமாக கொண்ட பணிகளுக்குப் பயன்படுத்தப்ப-படாமல் நீண்ட காலமாக பயனற்றும் சேதமடைவதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	இந்த உபகரணங்களைப் பயன்படுத்துவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.	முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு, பயனாளிகளைத் தெரிவு செய்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கும், அத்துடன் இவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக பயனாளிகளைத் தெரிவு செய்தல், மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளுக்காக முறையான பொறிமுறையொன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(எ)	"கந்துகர தசகய" (மலைநாட்டுக்கான பத்தாண்டுத் திட்டம்) 2024 – 2033" விசேட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சனாதிபதி செயலக வழிகாட்டற் சுற்றுநிருபத்தில், கல்வி வசதிகளை மேம்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட 5 துறைகளில் உள்ளடக்கப்படாத ஒரு நிகழ்ச்சித்-திட்டத்திற்காக, அதாவது 18 முன்பள்ளிகளுக்காக 43 அங்குல ஸ்மார்ட் ரிவி கொள்வனவு செய்ய ரூபா 1,852,020 செலவு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் திட்டத்தின் நோக்கங்களான பலபரிமாண வறுமைக் குறியீட்டின் (Multidimensional Poverty Index) எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாமற் போயிருந்தது.	ஆரம்ப காலப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சுட்டிக்காட்டலின் படி, ஸ்மார்ட் தொலைக்காட்சி மற்றும் இணைய வசதிகளைப் பயன்படுத்தி நவீனமயமாகவும் வெற்றிகரமாகவும் கற்பித்தல் செயன்முறையொன்றை நடைமுறைப்படுத்த முடியும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அந்த உபகரணங்களைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் விளைவுகள் குறித்த பின்தொடர் செயன்முறையொன்றை மேற்கொள்வதற்கும், அதை முறையான கற்பித்தல் வழிமுறைக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு, நோக்கத்திற்கு அப்பாற்பட்ட துறைகளுக்காக செலவுகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஏ)	பிட்டபெத்தரை பிரதேச செயலகத்தின் சமுர்த்திப் பிரிவினால், கடன் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்படாதிருந்த பசுமைக்குடில் கட்டுமானக் கடன் திட்டமொன்றின் கீழ், 5 பயனாளிகளுக்கு பசுமைக்குடில்-களை அமைத்துக் கொடுப்பதற்காக விநியோகஸ்தர் ஒருவருக்கு மொத்தமாக ரூபா 5,000,000 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த கட்டுமானங்களுக்காக நிதி விடுவிப்பதற்குப் போதுமான சான்றுகள் எதுவுமின்றி விநியோகஸ்தருக்குக் கடன் நிதி விடுவிக்கப்பட்டிருந்ததுடன், பயனாளிகளின் நோக்கங்கள் நிறைவேற்றப்படாமையினால் கடன் தவணை கொடுப்பனவுகள் தவறவிடப்பட்டிருந்தன. ஆகையால் மொத்தமாக ரூபா 4,184,500 தொகை நிலுவையாக மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.	திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, பயிற்சியும் வழங்கப்பட்டு, 5 பயனாளிகளுக்கு சுயதொழில் கடன் திட்டங்களின் கீழ் பசுமைக்குடில் நிர்மாணிப்பதற்காக 10 இலட்சம் என்ற வகையில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் கடன் தொகையை விடுவிக்கும்போது சம்பந்தப்பட்ட பயனாளிகளிடமிருந்து வவுச்சர்கள் கையொப்பமிடப்பட்டு உரிய நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது. சமுர்த்தி வங்கியில் கடன் விடுவிக்கும்போது தொழில்நுட்பக் குழுவொன்றிற்கு அது அனுப்பப்படுவதில்லை என்றும், சமுர்த்தி வங்கி முகாமையாளரின் மேற்பார்வையின் கீழ் விடுவிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.	விதிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைவான பணிகளுக்கு அப்பாற்பட்டு கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்திய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும், கடன் தொகையை மீள அறவிடுவதற்காக வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்தின் நிதியியல் கட்டுப்பாட்டிற்காக செயல்திறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையொன்றை தயாரித்து அதனைப் பேணிவருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதி வழங்க வேண்டும் என்பதுடன், அந்தப் பொறிமுறையின் செயல்திறன் குறித்து காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து, அதற்கேற்ப வினைத்திறனைப் பேணுவதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும், அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம்	2025 ஆம் ஆண்டிற்குரிய நிதி அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் போது, கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தற்போது காணப்படும் முறைமைகளின் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, அதன் அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்படும்.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட்டு, கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் அறிக்கையிடுவதற்கான செயன்முறையொன்றை ஏற்படுத்தல் வேண்டும்.

	மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வு அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகவோ அறிக்கையிடப்பட்டதாகவோ தகவல் கிடைக்கவில்லை.			
(ஆ)	கணக்காய்வு அதிபதிக்கு தேவையானவாறு குறித்த காலப்பகுதிக்குள் சகல கணக்காய்வு வினவுதல்களுக்கும் பதிலளிப்பதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும், கணக்கீட்டு உத்தியோகத்தராலும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வு அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையின் **4.5** ஆம் பந்திக்கமைய, கணக்காய்வு வினவுதல்களுக்குப் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர்காலத்தில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய உரியவாறு பதில்களைச் சமர்ப்பிப்பதை உறுதிசெய்யப்படும்.	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரால் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

	அவதானிப்புக்கள்		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணங்காமை**		
(அ)	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆவது பிரிவு	பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக வெளியிடப்பட்ட வருடாந்த விபரமான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையின் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் முன்மொழியப்படும் மாற்று தீர்வு நடவடிக்கைகள் அல்லது கவனத்திற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கணக்காய்வு அதிபதியிடம் அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும், அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இது சம்பந்தமாக கவனம் செலுத்தி தேவையான தீர்வுகள் வழங்கப்படும்.	சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட்டு, கணக்காய்வு அதிபதியிடம் உடனடியாக அறிக்கையிடல் வேண்டும்.

(ஆ)	1979 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க அரசாங்கக் காணி உடமையை மீளப் பெற்றுக்கொள்ளும் சட்டம்	மாத்தறை மற்றும் கம்புறுப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவுகளில், மொத்தமாக 74.98 பேர்ச்சஸ் அளவான காணியை அனுமதி பெறாமல் இறப்பர் பயிரிட்டு அனுபவித்து வந்த போதிலும், அதன் உடைமையை மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	அளவை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தோடு, அதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	குறித்த அளவைப் பணிகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, அனுமதியற்ற காணிகளின் உடைமையை மீளப் பெறப்படல் வேண்டும்.
(இ)	2018 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க கூட்டு வீடமைப்பு உரிமைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்	வெலிகம பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கந்தபாமுல-வத்த சுனாமி வீடமைபு தொகுதி, 4 மாடிகளைக் கொண்டதாக கூட்டு வீடமைப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்டு, 2007 ஆம் ஆண்டில் வீடமைப்புப் பயனாளிகளுக்குப் கையளிக்கப்பட்டிருந்த, 28 வீடமைப்பு அலகுகளைக் கொண்ட கூட்டு ஆதன வீடமைப்பு திட்டத்தைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மற்றும் மானியப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகள் 2023 ஆகஸ்ட் 14 ஆம் திகதியுடன் நிறைவடை-ந்திருத்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டு முடிவடையும் வரையிலும் திட்டம் கூட்டு ஆதனமாக பதிவு செய்யப்பட்டு வீடமைப்புப் பயனாளிகளுக்கு முறை-யான உறுதிப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை.	இந்தக் கட்டிடங்கள் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படுவதற் கும், வீட்டுப் பயனா-ளிகளுக்கு அளிப்பு பத்திரங்களை வழங்குவதற்கும் முடியாமல் போயுள்ளது.	கூட்டு ஆதனமாக பதிவு செய்து, வீட்டுப் பயனாளிகளுக்கு முறையான உறுதிப்பத்திரங்களை தயாரித்து, துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்..
(ஈ)	பொது நிர்வாகச் சுற்றுநிருபம்			
(i)	2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதியிடப்பட்ட 18/2001 ஆம் இலக்க சுற்றுநிருபம்	அக்குரஸ்ஸ, கம்புறுப்-பிட்டிய, கொட்டபொல, மாத்தறை, முலட்டியன, பஸ்கொட, திஹகொட மற்றும் வெலிகம ஆகிய 8	உள்ளக இடமாற்றுக் கொள்கையொன்றை தயாரித்து, 5 வருடங்களை விஞ்சிய உத்தியோக-	இடமாற்றுக் கொள்கையொன்றை உடனடியாக தயாரித்து, சுற்றுநிருபத்தின்

		பிரதேச செயலகங்களின் 646 உத்தியோகத்தர்கள் 5 வருட காலப்பகுதியை விஞ்சி 1 வருடம் தொடக்கம் 25 வருட காலப்பகுதிக்குள் இடமாற்றம் இன்றி ஒரே சேவை நிலையத்தில் தங்கியிருத்தல் அவதானிக்கப்பட்டது.	த்தர்களைப் பிரிவுக்குள்ளும் பிரிவுக்கு வெளியேயும் இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	ஏற்பாடுகளுக்கமைய இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
(ii)	2018 சனவரி 24 ஆம் திகதியிடப்பட்ட 05/2018(1) ஆம் இலக்க சுற்றுநிருபம்	பிரஜைகள் சேவைப் சாசனத்தை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் மாவட்டச் செயலகத்தினால் செயன்முறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	பிரஜைகள் சேவை சாசனம் தற்போது தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அந்தக் கருமங்களை மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் எதிர்காலத்தில் ஒரு செயன்முறையைத் தயாரித்து நடைமுறைப்படுத்தப்படும்.	பயனாளிகளுக்கு அதிகபட்ச வினைத்திறனுள்ள சேவை வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் பிரஜைகள் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுவதை மாவட்டச் செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள் தனிப்பட்ட ரீதியில் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், அதற்காக ஒரு செயன்முறையைத் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(iii)	எச்ஏ/டீஏ27/12 இலக்க 2006.03.21 மற்றும் 2009.06.12 ஆம் திகதிகளிடப்பட்ட கடிதங்கள் மற்றும் HAF-01/14/ பொ.சே.நி/ 26 இலக்க மற்றும் 2012 ஒக்டோபர் 05 ஆம் திகதியிடப்பட்ட சுற்றுநிருபம்.	பிரதேச செயலாளர்கள் தமது பிரிவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் குடியிருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டிருந்த போதிலும், வெலிகம பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் குடியிருக்கவில்லை. அதற்கமைய, 2007 ஆம் ஆண்டில் ரூபா 3,922,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலாளரின் அட்டவணைப்படுத்தப்பட்ட வீடும், அதில் இருந்த ரூபா 129,000 பெறுமதியான நிலையான சொத்துக்களும் 2021 யூன் 30 ஆம் திகதி முதல் கணக்காய்வுத் திகதி	உத்தியோகபூர்வ இல்லம் குடியிருப்பதற்குப் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால், எந்தவொரு உத்தியோகத்தரும் அதில் குடியிருக்க விருப்பமின்றி உள்ளதாகவும், தற்போது அத்திருத்தப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.	குறித்த திருத்தப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, உத்தியோகபூர்வ இல்லம் பிரதேச செயலாளருக்கு குடியிருப்பதற்காக கையளிக்கப்படல் வேண்டும்.

		வரையில் 3 ஆண்டுகளும் 6 மாதங்களுமாக செயலற்றுக் காணப்பட்டது.		
(iv)	எச்ஏ/டீஏ27/12 இலக்க 2006.03.21 மற்றும் 2009.06.12 ஆம் திகதிகளிடப்பட்ட கடிதங்கள் மற்றும் HAF-01/14/ பொ.சே.நி/ 26 இலக்க மற்றும் 2012 ஒக்டோபர் 05 ஆம் திகதியிடப்பட்ட சுற்றுநிருபம்.	பஸ்கொட பிரதேச செயலகத்திற்குரிய பிரதேச செயலாளருக்கு ஒதுக்கப்பட்டு அட்டவணை-ப்படுத்தப்பட்ட வீடும், அட்டவணைப்படுத்தப்படாத அரச உத்தியோகத்தர் குடியிருப்புகள் 4 இல் 2 உம் செயலற்றுக்கிடந்தன.	நிரந்தரப் பிரதேச செயலாளர் ஒருவர் இல்லாத காரணத்தினால் அட்டவணைப்படுத்தப் பட்ட வீடு பாவிக்க-ப்படாமல் இருந்ததாகவும், அட்டவணைப்படுத்தப் படாத வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதா லும் சுகாதார வசதிகள் திருத்தப்பட வேண்டிய மட்டத்தில் இருப்பதா லும் வீடுகள் பயனற்ற நிலையில் காணப்படுதல் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமாகும்.	குறித்த வீடுகள், முறையாகவும் சுற்றுநிருபத்திற்கமை யவும் பயன்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்படல் வேண்டும்.
(உ)	அரச நிதிச் சுற்றறிக்கை			
(i)	2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆவது பந்தி	2024 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்துக்கு குறித்த ஆண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டியிருந்த போதிலும், அன்றைய தினத்திலிருந்து 37 நாட்கள் தாமதமாகத் தயாரிக்கப்பட்டு, பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிரு-க்கவில்லை.	குறித்த நிலைமையைத் திருத்துவதற்கு, எதிர்காலத்தில் திட்டமிடல் பிரிவினால் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படும் என்பதைப் தயவுடன் அறியத்தருகிறேன்.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய, எதிர்வரும் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரித்து, அதனை குறித்த திகதிக்கு முன்னர் அங்கீகரித்து செயற்படுத்துவதற்கும் ,முன்னேற்ற மீளாய்வு செய்வதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ii)	04 பந்தி	வருடாந்த பெறுகைகள் திட்டமானது நடப்பு ஆண்டின் திசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரி-க்கப்பட்டு, அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தைப்	பெறுகைகள் திட்ட-மானது ஒதுக்கீட்டு வரைவு அங்கீகரிக்க-ப்பட்டதன் பின்னரே தயாரிக்கப்படுவதால் இந்த காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், அதற்கான	எதிர்வரும் ஆண்டுக்கான பெறுகைகள் திட்டமானது சுற்றறிக் கைக்கு அமைய அங்கீகாரம் பெறப்பட்டு, அதன் பிரதிகள்

		பெற்றுக்கொண்டு அதன் பிரதிகளை தேசிய பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வு அதிபதி மற்றும் அரச நிதித் திணைக்களம் என்பன-வற்றுக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்ப-ட்டிருக்கவில்லை.	அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அரச நிர்வாக மற்றும் உள்நாட்டுக் அலுவல்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதற்கான அங்கீகாரம் இன்னும் வழங்கப்படவில்லை என்றும் அறியப்படுகிறது.	சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
ஊ)	அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 9.8 ஆவது வழிகாட்டல்	மாத்தறை மாவட்டச் செயலகம் உட்பட 16 பிரதேச செயலகங்களினால் அரச இலத்திரனியல் கொள்முதல் முறைமை (e-GP) நடைமுறைப்ப-டுத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இலத்திரனியல் அரச கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	எதிர்வரும் ஆண்டு முதல் அரச இலத்திர-னியல் கொள்முதல் முறைமை (e-GP) பின்பற்றப்படல் வேண்டும்.
(எ)	காணி ஆணையாளர் நாயகத்தின் 2021 யூலை 20 ஆம் திகதியிடப்பட்ட 2021/05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆவது பிரிவும் மற்றும் 2008/4(1) ஆம் இலக்க சுற்றறிக்கையும்.	சுனாமி வீடுகள் 15 ஐ பயனாளிகள் அல்லாத தரப்பினரால் அனுபவிக்க-ப்பட்டிருந்த போதிலும், அதற்கு எதிராக சட்டதிட்டங்களுக்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தவறியிருந்தனர்.	காணி ஆணையாளர் நாயகத்தின் 2021/05 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் ஊடாக, காணி கச்சேரி நடாத்தி காணி உரிமையை வழங்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்-படுகிறது.	பொறுப்பிலிருந்து தவறிய உத்தியோகத்தர்கள் தொடர்பாகப் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அத்துமீறல் குடியிருப்பாளர்கள் தொடர்பில் முறையான நடவடிக்கைகளை எடுக்கப்படுதல் வேண்டும்.
(V)	ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் 2022 யூன் 10 ஆம் திகதியிடப்பட்ட 03/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 (ஈ) ஆவது பந்தியும் 07 ஆவது பந்தியும்.	13 பிரதேச செயலகங்கள் ஓய்வூதியக் கொடுப்பனவு செய்யும்போது மேற்கூறிய சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்காத நிலையில், மேலதிகமாக வழங்கப்பட்ட ஓய்வூதியத்தில் ரூபா 9,415,350 ஆனது 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது	கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள் ளவாறு, ஓய்வூதியம் மேலதிகமாக வழங்கப்பட்ட பிரதேச செயலகங்களால் குறித்த பணம் முறையாக அறவிடப்படுவதாக அறியப்படுகிறது.	முறையான விசாரணைகளை மேற்கொண்டு, துஷ்பிரயோகம் இடம்பெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களு க்கு முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், ஏனைய மேலதிக கொடுப்பனவுகளைத் துரிதமாக அறவிடுவதற்கும், ஓய்வூதியம் வழங்குதல்

			தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டைப் பலப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.5 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் திமெம்பர் 31 ஆம் திகதியன்று 2 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையான 37 வைப்பு மீதிகளின் மொத்தத் தொகையானது ரூபா 5,870,922 ஆக இருந்ததுடன், அவற்றில் ரூபா 3,460,374 பெறுமதியான 14 மீதிகள் 5 வருடங்களுக்கும் மேற்பட்ட பழைமையானவையாக காணப்பட்டன. இது தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 இற்கமைய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	காலங்கடந்த வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இற்கமைய துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.6 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிப் பிரமாணம் 371(5) இற்கமைய, இடைக்கால முற்பணமொன்று வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த அலுவல் நிறைவு செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் மீண்டும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 18 சந்தர்ப்பங்களில் உத்தியோக-த்தர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தமாக ரூபா 440,972 ஆன இடைக்கால முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு 13 தொடக்கம் 269 நாட்களுக்கிடையிலான காலதாமதம் ஏற்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் இது குறித்துக் கடுமையாக கவனம் செலுத்தி இடைக்கால முற்பண-ங்களைத் தீர்ப்பனவு செய்து கொள்வதற்காக சம்பந்த-ப்பட்ட உத்தியோகத்த-ர்களை அறிவுறுத்த-ப்பட்டுள்ளனர்.	உரிய வகையில் முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்யாமை தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்த-ர்களுக்கு முறையான நடவடிக்கை எடுப்பதற்கும், எதிர்காலத்தில் நிதிப் பிரமாணம் 371(5) இற்கமைய குறித்த நாட்களுக்குள் இடைக்கால முற்பணங்கள் தீர்வு செய்யப்படுவதை உறுதிப்படு-த்தும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தலும் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	''கந்துகர தசகய'' (மலைநாட்டுக்கான பத்தாண்டுத் திட்டம்) 2024-2033 விசேட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவின் 08 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 51 பயனாளிகளுக்கு 42,440 கறுவா கன்றுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் 23 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 11,435 கறுவா கன்றுகள் நிலத்தில் நடப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 285,875 ஆனது பயனற்ற செலவாக காணப்பட்டது.	பயனாளிகளுக்கு கறுவா கன்றுகள் வழங்கப்பட்ட வேளையில் கடுமையான மழை வீழ்ச்சி ஏற்பட்டமை காரணமாக, காணிகளை மீள தயார் செய்து கன்றுகளை நட வேண்டியேற்பட்டமையினால் கறுவா கன்றுகள் நடுகை தாமதமாகியது.	முறையான வேலைத்திட்ட-மொன்றை தயாரித்து மேற்பார்வையையும் பின்தொடர்தலையும் மேற்கொண்டு செயற்திட்ட இலக்குகளை அடைந்து-கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	கொட்டப்பொல பிரதேச செயலகத்தினால் பட்டுக்கித்துலயில் இருந்து பண்ணைக்கான வீதியை கற்கள் (கூழாங்கற்கள்) பதித்து அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் வீதியில் பதிக்கப்பட்டிருந்த கற்கள் உரிய அமுக்க வலிமையைக் கொண்டிருக்-கவில்லை என வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பரிசோதனைக்கூட தர அறிக்கைகளின்படி அவதானிக்க-ப்பட்டது. அதற்கமைய இல. 05 ஆன வேலை விடயத்தின் கீழ் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்ப-ட்டிருந்த ரூபா 797,098 ஆனது முறையற்ற மற்றும் பயனற்ற செலவாக ஆகியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.	கணக்காய்வு மேற்கொள்ள-ப்பட்ட சந்தர்ப்பத்தில், இந்த வீதியிலிருந்த 03 குட்டி கற்கள் (blocks) பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அகற்றப்பட்ட கற்கள் நிறம் மங்கிப் போயிருந்தன என்பதுடன், அவற்றில் 02 கற்கள் 25 KN இலும் குறைவாகக் காணப்பட்டன. அவ்வாறான பலவீனமான கற்களை அகற்றி அதற்குப் பொருத்தமான கற்களைப் பயன்படுத்தி மீண்டும் வீதியை ஒப்பந்தக்காரரைக் கொண்டு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பலவீனமான கற்களை அகற்றி அதற்குப் பொருத்தமான கற்களைப் பயன்படுத்தி மீண்டும் வீதியை ஒப்பந்தக்காரரைக் கொண்டு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் மேலும், இதுபோன்ற நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளும் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	கொட்டப்பொல பிரதேச செயலகத்தினால் நிஸ்ஸங்கபுர பிரதான வீதியில் அமையப்பெற்ற பழுதடைந்த பகுதியின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்	கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கமைய, மேற்கூறிய திட்டத்தைத் திருத்தம் செய்வது	சம்பந்தப்பட்ட திருத்தம் துரிதமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும், முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு, முறைகே-

	பூர்த்தி செய்யப்பட்ட வீதியின் மொத்த நீளத்தின் 137 மீற்றரில், 78 மீற்றர்கள் அதாவது வீதியின் மொத்த தூரத்தின் 57 சதவீதமான வீதி உரிய தர நியமமற்றதாக காணப்பட்ட-துடன், அது சம்பந்தமாக சுயாதீன தொழில்நுட்பக் களப் பரிசோத-னைகள் மற்றும் பரிசோதனைக்கூட தரப் பரிசோதனைகள் மேற்கொள்-ளப்பட்டு, அது தொடர்பான அறிக்கைகளும் சான்றுகளும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தொடர்பாக மாவட்டப் பொறியியலாளருடன் தொலைபேசியில் கலந்துரையாடப்பட்டதுடன், அது குறித்த இடப் பரிசோதனையை மேற்கொண்டு தேவையான எதிர்கால நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.	டொன்று இடம்பெற்றிருந்தால், பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	ரூபா 1,310,513 செலவில் அக்குரஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் "கந்துகர தசகய" (மலைநாட்டுக்கான பத்தாண்டுத் திட்டம்) திட்டத்தின் கீழ் கேபியன் பக்கச்சுவர் அமைக்கும் போது, பக்கச்சுவருக்கு உரிய அளவிலான கற்களைப் பயன்படுத்தப்படாமையால் கேபியன் பெட்டிகளுக்குள் (Gabion Boxes) வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளமை மற்றும் அவை சுவரில் இருந்து வெளிப்பக்கமாக நீண்டுள்ளமை காரணமாக சுவரின் பலம் குறைந்துள்ளமையும் அவதானிக்கப்பட்டது. மேலும், பெறுகை வழிகாட்டல் கோவையில் 7.8.4 (ஶ) இற்கு இணங்காமல் ஒப்பந்தக்காரரினால் செயற்திட்டம் முறையற்ற வகையில் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.	இது குறித்து சுயாதீன விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக சுயாதீன விசாரணைச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் அறிக்கை எதிர்காலத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும்.	முறையான விசாரணை-யொன்றை மேற்கொண்டு, பக்கச் சுவரின் தரம் மற்றும் பலம் குறித்து உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கும், அதன் அடிப்படையில் கட்டமைப்பு மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், உப ஒப்பந்தம் வழங்கியது தொடர்பாகவும் உரியவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.2 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	கொட்டப்பொல பிரதேச செயலகத்திற்கு கிடைத்த மொத்தமாக ரூபா. 2,775,000 நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்ட 12 திட்டங்கள் பாதியில் கைவிடப்பட்டிருந்தன, அத்துடன், அந்தத் திட்டங்களுக்காக மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டு முடிவில் செலவிடப்பட்ட மொத்தப் பணம் ரூபா. 1,663,014 ஆகும்.	"கந்துகர தசகய" (மலைநாட்டுக்கான பத்தாண்டுத் திட்டம்) மற்றும் பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடுகள் பெறப்பட்டிருந்தும், இந்த 12 திட்டங்களையும் பூர்த்தி செய்ய முடியாமல் போயுள்ளது.	திட்டங்களைக் கைவிட்டமை தொடர்பாக முறையான விசாரணை ஒன்றை மேற்கொள்வதுடன், கைவிடப்பட்ட திட்டங்களை பொருத்தமான வேறு பணிகளுக்குப் பயன்படுத்துவ-தற்கான சாத்தியக்கூறுகளை விரைவாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கை-

		களை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 12 பிரதேச செயலகங்களுக்காக, ‘‘கந்துகர தசகய’’ (மலைநாட்டுக்கான பத்தாண்டுத் திட்டம்) மற்றும் பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 73 திட்டங்களை நடைமுறைப்படுத்து-வதற்கு மொத்தமாக ரூபா. 33,751,479 நிதி ஒதுக்கீடு கிடைத்திருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கூட குறித்த திட்டங்கள் எதுவும் நடைமுறைப்-படுத்தப்படாமையால், அத்திட்டங்களைச் செயற்படுத்து-வதன் மூலம் அடையக்கூடிய பொது மக்களின் நலன்கள் இழக்கப்பட்டுள்ளன.	அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது எழுந்த பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அவற்றைச் செயல்படுத்த முடியவில்லை என்பதாகும்.	திட்டம் ஒன்றின் ஒவ்வொரு கட்டத்திலும் நிதி ஒதுக்கீட்டை அதிகபட்ச வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

4.4 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மாத்தறை, திஹகொட மற்றும் கொட்டப்பொல பிரதேச செயலகங்கள், டயர்கள் (Tyres) ப∴பர்கள் (Buffels), அச்சுப்பொறிகள் (Printers) மற்றும் டோனர்களை (Toners) கொள்வனவு செய்தபோது, விபரக்குறிப்புகளுக்கு (Specifications) அமைய குறைந்த விலைமனுக்களை சமர்ப்பித்த விநியோகஸ்தர்களை நிராகரித்து, விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு ஊகங்களின் (assumptions) அடிப்படையில் அதிக விலைமனுக்களை சமர்ப்பித்த விநியோகஸ்தர்களிடமிருந்து பொருட்களை கொள்வனவு	எதிர்காலத்தில் இந்த மதிப்பீட்டுச் செயன்-முறைக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகை வழிகாட்டல் கோவைக்கு (Procurement Guidelines) அமையச் செயற்படுதல் வேண்டுமென்பதுடன், முறையான விசாரணை ஒன்றை நடாத்தி அதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

	செய்தமையால் மொத்தமாக ரூபா. 362,688 ஐ அதிகமாக செலுத்தியுள்ளன		
(ஆ)	"தசவித கந்துகர தசகய" (மலைநாட்டுக்கான பத்தாண்டுத் திட்டம்) 2024 – 2033 என்ற விசேட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கொட்டப்பொல பிரதேச செயலகம், முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளுக்காக ஸ்மார்ட் டி.வி (Smart TV), உருக்கு அலமாரிகள் (Steel Cupboards) மற்றும் கபட்களை (Almirahs) கொள்வனவு செய்தபோது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டல் கோவை 2006 இன் 2.6 ஆம் பிரிவுக்கு இணங்காமல், அத்துடன், சாரம்சமான விலைமனுக்களை சமர்ப்பித்த விநியோகஸ்தர்களின் விலை-களை நிராகரித்து, பின்னர் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு ஊகங்களின் அடிப்படையில் அதிக விலைமனுக்களை சமர்ப்பித்த விநியோகஸ்தர்க-ளிடமிருந்து பொருட்களை வாங்கியதன் மூலம், மொத்தமாக ரூபா. 570,967 ஐ அதிகமாகச் செலுத்தி அரசுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தப்பட்டுள்ளது.	சந்தையில் உயர் அங்கீகாரம் மற்றும் நம்பகமான வர்த்தகப் பெயரைக் கொண்டிருத்தல், உயர்ந்த தரத்துடன் கூடிய நீடித்த உழைப்பு, வலிமை மற்றும் இலகுவான பாவனை (பயன்பாடு), தரத்தில் மேம்பட்டிருத்தல், துருப்பிடிக்காமை மற்றும் சிறந்த பூச்சு (உயர்ந்த பினிஷிங்) போன்ற காரணங்களின் அடிப்படையில் குறித்த பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.	பெறுகை வழிகாட்டல் கோவைக்கு (Procurement Guidelines) அமையச் செயற்படுதல் வேண்டுமென்பதுடன், முறையான விசாரணை ஒன்றை நடாத்தி அதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாத்தறை மாவட்டச் செயலகத்திடம் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையில் இருந்த ஒரு முச்சக்கர வண்டி (Three-wheeler), 2022 செப்தெம்பர் 27 ஆம் திகதி முதல் பாவனையின்றி மாவட்டச் செயலக வளாகத்தினுள் காணப்பட்டது.	பதில்கள் வழங்கப்படவில்லை.	இந்த வாகனத்தை திருத்தம் செய்து பாவனைக்குக் கொண்டுவர அல்லது முறையான வகையில் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ)	பிட்டபெத்தரை பிரதேச செயலகத்தில் 2022 ஆம் ஆண்டு முதல் பொருட்களின் ஆய்வின் போது திருத்தம் செய்யப்பட வேண்டியவை என அடையாளம் காணப்பட்ட ரூபா. 292,650 பெறுமதியான 2 நகலெடுக்கும் இயந்திரங்களை (Photocopy Machines) திருத்தம் செய்து பாவனைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இருந்தபோதிலும், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் ஒரு இயந்திரத்தின் வருடாந்த சேவை ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்காக ரூபா. 28,910 செலுத்த-ப்பட்டிருந்தது.	வருடாந்த சேவை ஒப்பந்தத்தின் கீழ் ரூபா. 28,910 செலுத்தப்பட்ட KYOCERRA இயந்திரம் மனித வளங்கள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், CANON இயந்திரத்தைப் பழுது-பார்ப்பதை விட புதிய இயந்திரம் ஒன்றை வாங்குவது நிறுவனத்-திற்கு மிகவும் இலாபகரமானது என்பதால், இந்த இயந்திரம் 2025 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் ஆய்வுக்காகச் சமர்ப்பிக்க-ப்பட்டு, எதிர்காலத்தில் அகற்றப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை-கள் மேற்கொள்ளப்படும் என்றும் அறியப்படுகிறது.	இந்த இயந்திரங்களை திருத்தம் செய்து பாவனைக்குக் கொண்டுவருதல் பயனு-ள்ளதாயின், அதற்காக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும், அத்துடன், பயனற்ற வகையில் பராமரிப்புச் செலவுகள் மேற்கொள்ளப்படு-தலாகாது.
(இ)	2021 ஒக்டோபர் 11 ஆம் திகதி முதல் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டு இறுதி வரை பிரதேச செயலாளரால் வசிப்பிடத்திற்காகப் பயன்படுத்தப்படாமல் இருந்த, கொட்டப்பொல பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம், 2024 ஆம் ஆண்டில் ரூபா. 541,495 செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது	பிரதேச செயலகத்திற்கு மிக அருகில், எளிதில் அணுகக்கூடிய இடத்தில் பிரதேச செயலாளர் வசித்து வந்தமையால், முழு நேரமும் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் அவர் தங்கியிருக்கவில்லை என்றும், புனரமைப்புக் கடமைகள் மேற்கொள்ள-ப்பட்டதன் காரணமாக, மீண்டும் திருத்தம் செய்யாமல் தற்போது அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.	அரசாங்கச் சொத்துக்கள் விவேகத்துடன் பயன்படுத்தப்-படுதல் வேண்டுமென்பதுடன், தேவையான முறையான பராமரிப்புக் கடமைகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.6 நட்டங்களும் சேதங்களும்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டில் 2 பிரதேச செயலகங்களில் ஏற்பட்டிருந்த மொத்தமாக ரூபா. 165,346 பெறுமதியான 2 நட்டங்கள் மற்றும் சேதங்கள், நிதிக்	கணக்காய்வினால் (Audit) சுட்டிக்காட்டப்பட்டதற்கு அமைய, 2 பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா. 165,346 பெறுமதியான 2	வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதி பிரமாணங்களுக்கு அமைய செயற்படுதல் வேண்டும் என்பதுடன், நிதிக் கூற்றுக்களில் முறையான வகையில் பதிவு

	கூற்றுக்களின் அட்டவணை 01 இன் கீழ், "மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய நட்டங்கள் மற்றும் சேதங்கள்" என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட-வில்லை. அத்துடன், 3 பிரதேச செயலகங்களில் ஏற்பட்ட 3 வாகன விபத்துக்கள், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கூட மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	சேதங்கள்/நட்டங்கள் தொடர்பான சம்பவங்கள் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்போது பதிவு செய்யப்படாமையால், அவை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை என்றும், வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டங்கள் தேசிய காப்புறுதி நிதியத்திலிருந்து (National Insurance Trust Fund) மீளப் பெறப்பட்டு-ள்ளது என்றும், நி.பி. 104(4) இற்கான இறுதி அறிக்கையைத் தயாரிக்க குழுவொன்று நியமிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.	செய்யப்படுதல் வேண்டும்.
(ஆ)	மாத்தறை பிரதேச செயலகத்தில் அடிவால்வுடனான (Foot Valve) ஒரு நீர் மோட்டார் (Water Motor) காணாமல் போனது தொடர்பாக, நிதி பிரமானம்104(3) இன் கீழ் பரிசோதனை நடாத்தப்பட்டு, 2023 திசெம்பர் 04 ஆம் திகதி ஒரு விசாரணையும் நடாத்தப்பட்டிருந்தபோதிலும், நிதி பிரமாணம் 104(4) இற்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	காணாமல் போன இந்த நீர் மோட்டார் தொடர்பில் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு, பதிவேடுகளில் இருந்து நீக்குவதற்காக தற்போது கணக்குகள் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என்று அறியப்படுகிறது.	விரைவாக நிதி பிரமாணம் **104(4)** இற்கு அமையச் செயற்படுதல் வேண்டு-மென்பதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்குச் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

4.7 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்ட செயலகத்திற்கு மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 50 கணக்காய்வுக் கேள்விகளுக்கு, 2025 மே 27 ஆம் திகதி வரையிலும் கூட பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை, அத்துடன், அந்தக் கேள்விகளுக்குரியதாக கணக்கிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா. 64,197,761 ஆகும்.	கணக்காய்வாளர் நாயகத்தினால் (Auditor General) வெளியிடப்படும் கணக்காய்வுக் வினவுதல்களுக்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பதில் வழங்கப்படுதல் வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் விதிகளுக்கு அமைய குறித்த தினத்தில் பதில் வழங்கப்படுதல் வேண்டும். இது தொடர்பாக கணக்களிப்பு கணக்கீட்டு உத்தியோகத்தர் முறையான வேலைத்திட்டம் ஒன்றை வகுத்து கணக்காய்-வுக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியில் இந்தக் கடமையை கண்காணிக்க வேண்டும்.

4.8 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச செயலாளர் பிரிவில் கட்டப்பட்ட 10 சுனாமி கூட்டு வீட்டுத் திட்டங்களில் 20 வருடங்களாக வசித்து வரும் 56 வீட்டு உரிமையாளர்களுக்கு அளிப்பு பத்திரங்களை (Grant Vouchers) தயாரித்து, இதுவரை வீடுகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	சுனாமி வீடுகள் - இந்த 56 வீடுகளில் 22 வீடுகள் கூட்டு ஆதனமாக உள்ளன. ஏனைய வீடுகளுக்கான அளிப்பு பத்திரங்களைத் (Grant Vouchers) தயாரிப்பதற்காக காணி ஆணையாளர் நாயகத்திடம் (Commissioner General of Lands) சமர்ப்பிக்கப்பட்டு-ள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி 56 வீடுகளுக்குமான உறுதிப் பத்திரங்களைத் (Title Deeds/Deeds of Transfer) தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	வேலை நிறைவு தாமதமானமைக்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும், உறுதிப் பத்திரங்களை விரைவாக தயாரித்து பயனாளிகளுக்கு விநியோகிப்பதற்கும், இதனை ஒரு குறிப்பிட்ட செயல்திட்டத்தில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய 75 பேர்ச் கொண்ட 4 அரச காணிகளில், 4 தொலைபேசி நிறுவனங்கள் 4 தொலைபேசி அலைபரப்பு கோபுரங்களை அமைத்து, அக்காணிகளை அனுபவித்து வருவதுடன், அக்காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 14 முதல் 20 ஆண்டுகள் வரை தாமதமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதேபோல், 1 முதல் 4 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து காணி ஆணையாளர் நாயகத்தின் ஒப்புதல் கிடைக்கப்பெறாத 10 நீண்ட கால குத்தகை கோவைகள் இருந்தமையால், அரசாங்கத்தால் ஈட்டியிருக்கக்கூடிய குத்தகை வருமானம் இழக்கப்பட்டுள்ளது.	கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டதற்கு அமைய, காணி ஆணையாளர் நாயகத்தின் ஒப்புதல் கிடைக்கப்பெறாத 10 நீண்ட கால குத்தகை கோவைகளுக்கு ஒப்புதல் கிடைத்ததன் பின்னர், நீண்ட கால குத்தகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	முறையான விசாரணை ஒன்றை நடாத்தி, சரியான நேரத்தில் செயற்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், சம்பந்தப்பட்ட ஒப்புதல்களை விரைவாகப் பெற்று, நீண்ட கால குத்தகைகளைத் (Leases) தயாரித்து, குத்தகை வருமானத்தை அறவிடுவதற்கு ஒரு துரித வேலைத்திட்டத்தை வகுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(இ)	மண்சரிவுகள் தொடர்பான அதி அபாயத்தின் காரணமாக, 2019 ஆம் ஆண்டில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவத்தால் (NBRO) அறிவிக்கப்பட்டதற்கு அமைய, 3 பயனாளிகளை வசிப்பிடத்திலிருந்து அகற்றி, வேறொரு பொருத்தமான இடத்தில் குடியமர்த்துவதற்காக அரச காணிகளை முறையான வகையில் மாத்தறை பிரதேச செயலகத்திற்கு மாற்றிக் கொடுக்காதமையால், அந்தப் பயனாளிகள் தொடர்ந்தும் அபாயகரமான வீட்டிலேயே வசித்து வருகின்றனர் என்பது அவதானிக்கப்பட்டது.	மண்சரிவுகள் தொடர்பான அதி அபாயத்தின் காரணமாக, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவத்தால் (NBRO) அறிவிக்கப்பட்டதற்கு அமைய, *3* பயனாளிகளை வசிப்பிடத்திலிருந்து அகற்றி, வேறொரு பொருத்தமான இடத்தில் குடியமர்த்துவதற்காக அரச காணிகளை முறையான வகையில் தற்போது மாத்தறை பிரதேச செயலகத்திற்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று அறியப்படுகிறது.	மீள் குடியேற்ற தாமதத்திற்குப் பொறுப்பான தரப்பினரைக் கண்டறிந்து முறையான நடவடிக்கை எடுப்பதற்கும், உயர் மண்சரிவு அபாயத்தின் காரணமாக குடியிருப்பாளர்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்றி பொருத்தமான வேறொரு இடத்தில் குடியேற்றுவதற்கும் துரித நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வுக்க உட்பட்ட ஆண்டில், மாவட்ட செயலகம் மற்றும் 09 பிரதேச செயலகங்களில் துப்புரவு சேவைகளை பேணுவதற்காக துப்புரவு உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா.26,660,379 செலுத்தப்பட்டிருந்த போதிலும், சம்பந்தப்பட்ட உபகரணங்கள் அல்லது இரசாயனப் பொருட்கள் அலுவலக களஞ்சியத்திற்கு கிடைக்கப் பெறவில்லை என்பதுடன், அவை பாவனைப் பொருட்களின் பதிவேட்டில் உள்ளடக்க-ப்படாமல் துப்புரவு ஊழியர்களால் பயன்படுத்தப்பட்டதாகவும் அவதானிக்கப்பட்டதால், துப்பரவுப் பொருட்கள் பெறுகை மற்றும் வழங்கல் தொடர்பான தற்போதுள்ள உள்ளக கட்டுப்பாடு மிகவும் பலவீனமான மட்டத்தில் உள்ளது என்றும் அவதானிக்கப்பட்டது.	அந்த வருடத்தின் தேவையினை அதனூடாகப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பதால், அதற்கேற்ப செயற்படுமாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	துப்பரவுப் பொருட்கள் பெறுகை மற்றும் வழங்கல் தொடர்பாக போதுமான மற்றும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை தாபிக்கப்படுதல் வேண்டும்.

5. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு முடிவில், மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் சிரேஷ்ட மட்டத்திலான 13 பதவிகளிலும், மூன்றாம் நிலை மட்டத்திலான 02 பதவிகளிலும், மொத்தம் 15 வெற்றிடங்கள் காணப்பட்டன.	ஆளணி தகவல் அறிக்கை ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் அடுத்த மாதத்தின் இறுதித் தினத்திற்கு முன்னர் cadreinformation@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படுவதுடன், அதன் அச்சிடப்பட்ட பிரதி முகாமை-த்துவ சேவைத் திணைக்கள-த்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், தற்போதுள்ள வெற்றிடங்களுக்காக கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	ஆளணி மீளாய்வொன்றை மேற்கொண்டு, சேவையின் தேவையின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதலும் வேண்டும்.
(ஆ)	மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் இரண்டாம் நிலை மட்டத்-திலான 326 பதவிகளிலும், ஆரம்ப நிலை மட்டத்திலான 08 பதவிகளிலும், மொத்தம் 334 உத்தியோகத்தர்களின் அதிகப்படியான ஆளணி காணப்பட்டது..	தற்போதுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியுடன் இணைக்கப்படுவார்கள் என்றும், எதிர்காலத்தில் அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	மேலதிக உத்தியோகத்தர்-களை வேறு சேவை நிலையங்களுக்கு இணைப்பு செய்தல் அல்லது இடமாற்றம் செய்வதன் மூலம், அந்த மேலதிக உத்தியோகத்தர்களை உரியவாறு சமநிலைப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ சேவைகள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 02/2018 இலக்கமும் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆம் திகதியிடப்பட்டதுமான சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத்திட்டம் தயாரிக்கப்படவில்லை.	மனித வளத் திட்டத்தை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	2019 யூலை 04 ஆம் திகதி, மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சினால் தோட்டச் சமூக தொடர்பாடல் இணைப்பாளர் (Facilitator) ஆக நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் மாத்தறை	இந்த உத்தியோகத்தரை அழைத்து, அவர் களப் பதிவேட்டினைப் பேணுதல் வேண்டும் என்றும், கடமைப் பட்டியலின் படி செயற்பட வேண்டும் என்றும், அத்துடன், எதிர்கால வேலைத்திட்டங்களைத் தயாரித்து உரிய தினத்தில் மேற்பார்வை செய்யும்	சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு கடமைகளை வழங்காமை தொடர்பில் மேற்பார்வை உத்தியோகத்தருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுப்பதுடன், சகல உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் முறையான

	மாவட்ட செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தார். 2024 ஆம் ஆண்டாகிய போதும், அந்த உத்தியோகத்தருக்கு கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அவரது கடமைகள் குறித்து முறையான மேற்பார்வையின்றி மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு இறுதி வரை அவருக்கு மொத்தமாக ரூபா.2,589,884 சம்பளமாகவும் கொடுப்பனவுகளாகவும் செலுத்தப்பட்டிருந்தது.	உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.	கடமை வழங்கல் இடம்பெறுவதையும், உரிய மேற்பார்வை நடைபெறுவதையும் உறுதிப்படுத்தும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(உ)	மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் உரியவாறு இணைப்புச் செய்யப்படாமையின் காரணமாக, 07 பிரதேச செயலகங்களில் 11 வெற்றிடங்களும் மேலும் 02 அலுவலகங்களில் 03 மேலதிக உத்தியோகத்தர்களும் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. பிரதேச செயலகங்களுக்கு இடையில் வெற்றிடங்களும் மேலதிக ஆளணியும் சமநிலைப்படுத்தப்படாத காரணத்தினால், அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பங்களிப்பை அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் சம அளவில் பெற்றுக்கொள்ள முடியவில்லை.	எதிர்காலத்தில் துரிதமாக, அனைத்து அலுவலகங்களுக்கும் சமநிலைப்படுத்தப்படும் வகையில் (மத்திய அரசாங்கத்தின் கீழ்) இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை உரிய சமநிலையுடன் சேவையில் ஈடுபடுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.